# பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து

1

சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

# வேதாகம போதனைகளையும் மற்றும் காரியங்களையும் உங்கள் பிள்ளைகளுக்குக் (கற்றுக்) கொடுங்கள்



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

*செய்தி:* **தீர்க்கதரிசியாகிய எலிசா,**
அக்டோபர் 2, 1956, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

27. நாம்... பிறகு, நான் ஒவ்வொரு சாயங்காலத்திலும், வீட்டில் இருக்கும் போது... எல்லாவற்றையும் சுத்தம் செய்துவிட்டு (cleaned out), நான் என்னுடைய சிறு மகள்களை எடுத்து, அவர்களுக்கு வேதாகமத்தைக் கற்றுக் கொடுக்கிறேன் (Bible study): அவர்களையும், மனைவியையும் குழந்தையையும் காரில் இருத்தி, அவ்வண்ணமாக எவரும் எங்களை இடைஞ்சல் செய்யாதவகையில் அங்குமிங்கும் சுற்றியவாறு ஓட்டிக்கொண்டு போவேன். அப்போது நான் அவர்களிடம், "எலியா என்பவன் யார்? அவன் என்னவாக இருந்தான்?" என்பது போன்ற கேள்விகளைக் கேட்பேன்.

அந்தச் சிறிய ஆறு வயது மகளும் எட்டு வயது மகளும் மிக வேகமாக, "திஸ்பியன்" என்று பதிலளிப்பார்கள். பாருங்கள், மிகத் துரிதமாக பதிலளிப்பார்கள்.

பிறகு நான், "அவன்... ஆக இருந்தான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும். இன்றைக்கு நீங்கள்

அவனைச் சந்தித்திருந்தால், உங்களால் எப்படி கூற முடிந்திருக்கும்? அவன் எவ்விதமான ஒரு மனிதனாக இருந்தான்?" என்று நான் கேட்டேன்.

"ஓ, அவன் மயிரடர்ந்த (முடி நிறைந்த) ஒரு மனிதனாகவும், தன்னுடைய இடுப்புகளைச் சுற்றிலும் தோலைப் (போர்த்தினவனாகவும்) இருந்தான்." சிறிய ரெபேக்காளோ அல்லது சாராளோ, ஒருவள் உரக்கச் சத்தமிட்டு பதில் கூறுவாள். பாருங்கள்?

28. **அப்படியே தொடர்ந்து அவர்களுடைய சிந்தைகளுக்குள்** ***(உள்ளங்களுக்குள், மனசுகளுக்குள் - மொழிபெயர்ப்பாளர்)*** **அதை கற்பித்து** ***(போதித்து)*** **கொடுத்துக்கொண்டேயிருங்கள், தொடர்ந்து அதை போதித்துக் கொண்டேயிருங்கள்** ***(drilling)***. தாயே, அதைத்தான் நீ உன்னுடைய பிள்ளைகளிடம் செய்கிறாய். பட்டணத்தில் இங்குமங்கும் ஓடிக்கொண்டிருப்பதையும், இன்பத்தைத் தேடி ஊர் சுற்றிக் கொண்டிருப்பதையும் விட்டுவிடுங்கள்; **வேதாகம போதனைகளையும் மற்றும் காரியங்களையும் உங்கள் பிள்ளைகளுக்குக் [கற்றுக்] கொடுங்கள்**.

29. இங்கேயுள்ள சமுதாயங்களும் பதவிகளும் எல்லாமே, அது சபையில் இருந்தபோதிலும், பிள்ளைகளை வளர்க்க நேரமேயில்லாத அளவுக்கு, சபையானது மிகவும் மொத்தமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. பெண் பிரசங்கிமார்களைக் குறித்து நான் பேசுவதை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். இப்பொழுது, நான் அதன்பேரிலே திரும்பிப் போக (crawl back) வேண்டியிருக்கலாம். ஆனால் நான் இதை உங்களிடம் கூறட்டும்: **ஒவ்வொரு தாயும் ஒரு பிரசங்கியாக இருக்கிறாள். நிச்சயமாக. அவள் பிரசங்கம் செய்யும்படியாக வீட்டிலேயே ஒரு சிறு சபையை தேவன் அவளுக்குக் கொடுத்திருக்கிறார். எனவே, இப்பொழுது, அப்படியே அதைத் தொடர்ந்து செய்துகொண்டிருங்கள்.** அது நல்லது. நீங்கள் முதலில் அதைப் பெற்றுக்கொள்ளுங்கள். எனவே பிறகு, சரியாக உங்கள் பிள்ளைகளோடு கூட செல்லுங்கள்.

30. இங்கே கொஞ்ச காலத்திற்கு முன்பு, நான் ஒரு கட்டுரையை வாசித்துக் கொண்டிருந்தேன், அங்கே ஒரு வீடு இருந்ததாம், இந்த வீட்டில் ஐந்து பையன்கள் பிறந்தார்கள். மூத்த பையன் கடற்படைக்குப் போக போதுமான வயதை

அடைந்த உடனே, அவன் கடற்படைக்குச் சென்றுவிட்டான். இரண்டாவது பையனும் அவனைப் பின்தொடந்து சென்று விட்டான், அவ்வாறே அடுத்தவனும் கடற்படையிலேயே சேர்ந்துவிட்டான், மொத்தமாக ஐந்து பையன்களுமே கடற்படையில் சேரும்வரையில், அவ்வாறு எல்லா பையன்களுமே கடற்படைக்குப் (Navy) போய்விட்டார்கள். அங்கே அவர்களுடைய குடும்பத்திலே கடற்படையில் வேலை செய்பவர்களோ, அல்லது கப்பற்படையில் வேலைபார்க்கிறவர்களோ யாரும் கிடையாது. ஏன் இவர்கள், இந்தப் பையன்கள், ஒவ்வொருவரும் கடற்படைக்குப் போக விரும்பினார்கள் என்று தாயாராலும் தகப்பனாராலும் புரிந்துகொள்ள முடியாதிருந்தது.

31. இதைக் குறித்து மிகவும் நன்றாக - அலசி ஆராய்ந்து பார்த்தார்கள். அப்போது படுக்கையறையில், அதைக் கண்டுபிடிக்க நேர்ந்தது, இந்தப் பையன்கள் எல்லாரும் வளர்க்கப்பட்ட இந்தப் படுக்கையறையில், அங்கே அமைதியானதும், சாந்தமானதுமான ஒரு கடலில், ஒரு பெரிய கப்பல் பிரயாணம் செய்து போய்க் கொண்டிருக்கும் ஒரு அழகான பெரிய படம் தொங்க விடப்பட்டிருந்தது. அது அந்தப்

பையன்களை மிகவும் கவர்ந்து ஈர்த்துவிட்டிருந்தது, அவர்கள் இரவில் படுக்கைக்குப் போகையிலும், இந்தப் படத்தைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அந்த அமைதியான, உணர்ச்சிகளைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் அளிக்கும் கடலில் கப்பலை ஓட்டிச்செல்ல வேண்டுமென்று அவர்களுடைய சிந்தையில் இருந்தது. காலையில் அவர்கள் எழும்பும்போதும், அவர்களால் காண முடிந்த முதலாவது காரியம் இரைச்சலற்ற அமைதியான கடலினூடாக போய்க் கொண்டிருந்த அந்தக் கப்பலாகத்தான் இருந்தது. அது அந்தப் பையன்கள் ஒவ்வொருவருமே கப்பலோட்டிகளாக ஆகும் அளவுக்கு அவ்வண்ணமாக அவர்களை ஈர்த்துவிட்டிருந்தது.


32. இப்பொழுது ஒரு கப்பலின் படமானது, பையன்களை கடற்படையில் வேலைசெய்கிறவர்களாக, கடலில் கப்பலோட்டிகளாக ஆகும்படி கவருமானால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் படமானது என்ன செய்தாக வேண்டும்? பாருங்கள்? **உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக எப்போதுமே சரியான காரியத்தையே கொண்டிருங்கள்.** “**பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை வளர்த்து.**” புரிகிறதா?


**அதை வளர்த்து, அதற்கு சரியாகப் போதியுங்கள். அது நிச்சயமாகவே, அதைவிட்டுப் விலகிச்செல்லாது.**

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதித் திருத்தம் செய்து வெளிவரும்.)*

★★★★★



W.M.S












HOLY BIBLE







# ஜெபித்த தாய்மார்கள்



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து


## *செய்தி:* தீட்டுக்களிக்கும் தண்ணீர், ஜூன் 6, 1955, பத்தி எண் 33

நீங்கள் முதலாவது சமையலறைக்கு வருகிறீர்கள். சமையலறை, அங்கே தான் நீங்கள் புசிக்கிறீர்கள். நீங்கள் வந்து, புசித்த பிறகு, சபையைப் போன்று, நீங்கள் பெஞ்சின் மேல் அமர்ந்து, வார்த்தையை கேட்கிறீர்கள். "விசுவாசம் கேள்வியினாலே வரும், வார்த்தையைக் கேட்பதினால் வரும்." அதன்பிறகு நீங்கள் வார்த்தையைப் புசித்த பிறகு, நீங்கள் அமர்ந்து அளவளாவும் அறைக்குள் (living room) வருகிறீர்கள், அது சபையிலுள்ள மற்றவர்களோடு கொண்டிருக்கும் ஐக்கியத்திற்குள் இருக்கிறது. அதன்பிறகு, **அந்தரங்கமாக இடம் யாதெனில் படுக்கையறை தான், அதனுள்ளே நீங்கள் பிரவேசித்து, முழங்கால்படியிடுகிறீர்கள், அங்கே தான் வழக்கமாக, நீண்ட காலத்திற்கு முன்பு, தாய்மார்களாகிய உங்களில் நிறைய பேர், உட்பிரவேசித்து, உங்கள் பிள்ளைகள் இரவில் வெளியி**

**லிருந்த போது, அவர்களுக்காக ஜெபம் பண்ணுவீர்கள்.** இன்றைக்கு உலகத்தோடுள்ள காரியம் அதுதான், **அதோ அங்கே முற்காலத்தில், நீண்ட காலத்திற்கு முன்பு, தங்கள் பிள்ளைகளுக்காகவும் மற்றும் காரியங்களுக்காகவும் ஜெபித்த அந்தப் பழைமை நாகரீகமான தாய்மார்களுக்குப் பதிலாக, இன்றிரவோ அவர்கள் தங்கள் பிள்ளைகளோடு வெளியேயிருந்து, புகைப்பிடித்துக்கொண்டும், மது அருந்திக் கொண்டும், அவர்கள் இருப்பது போன்று தொடர்ந்து செய்து கொண்டும் இருக்கிறார்கள். ஆகையால் தான் இளம்பருவத்தினரின் குற்றச் செயல்களை நாம் பெற்றிருக்கிறோம்.** அவர்களுக்கு இருந்த நாகரிகத்தைக் காட்டிலும், நாம் அதிக நாகரிகம் கொண்டவர்களாக பேசிக்கொள்கிறோம். எனக்கு அது சந்தேகமாயிருக்கிறது. உ-ஊ. அப்படியானால் நிச்சயமாக அதைப் போன்று நடந்திருக்க மாட்டோமே. ஒரு காரியம் உண்மை. **அந்தப் பழைமை நாகரீகமான பாணி எனக்குப் பிடிக்கும்.**

# நீங்கள் போய் ஜெபிக்கும் ஒரு இரகசிய இடம் உங்களுக்கு உண்டா?









சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: மோசேயைக் குறித்த போதனை, மே 13, 1956, பத்தி எண் 128

128. நீங்கள் ஜெபிக்கிறீர்களா? எத்தனை சிறு பையன்களும் சிறுமிகளும் ஜெபிக்கிறீர்கள்? உங்கள் கரங்களைப் பார்ப்போம். ஓ, அது அருமையானது. இப்பொழுது, அது நல்லது. **அம்மாவும் அப்பாவும் கூட உங்களைக் காணாத இடத்தில், நீங்கள் போய் ஜெபிக்கும் ஒரு இரகசிய இடம் உங்களுக்கு உண்டா?** நீங்கள் அவ்விதமாக ஜெபிக்கிறீர்களா? நீங்கள், நீங்கள் அவ்விதம் ஜெபிப்பது இல்லையா? **ஒரு சிறிய இடத்தைக் கொண்டிருந்து, இரகசியமாக நழுவிச் சென்று** (slip out), **ஜெபியுங்கள்**, உங்கள் சிறு ஜெபத்தைச் செய்யுங்கள். **நீங்கள் படுக்கைக்குப் போகும் முன்பு, ஒவ்வொரு இரவும் அதை ஜெபிக்கி**

**றீர்களா? நீங்கள் காலையில் எழும் போதும், மற்றும் காரியங்களிலும் அதை ஜெபிக்கிறீர்களா?** ஒ, அது நல்லது. மற்ற எத்தனை சிறு பையன்களும் சிறுமிகளும் ஜெபிக்கிறீர்கள் (உங்கள் கரத்தை மேலே உயர்த்துங்கள்)? கட்டிடம் (முழுவதும்) நிறைய பேர். ஒ, அது அருமையாக இல்லையா? நல்லது, இப்பொழுது, அது நல்லது. **அது நீங்கள் இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று உங்களுக்கு போதிக்கிற ஒரு உண்மையான தாயையும் தகப்பனையும் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள் என்பதைத்தான் காட்டுகிறது. இப்பொமுது, நீங்கள் உண்மையாகவே தேவையில் இருக்கும் போது தான், நீங்கள் அதிக உத்தமமாக ஜெபிப்பீர்கள்.** அது அவ்வாறு இல்லையா?

★★★★★

# நீங்கள் தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு மரியாதை செலுத்தும்போது, நீங்கள் தேவனுக்கே மரியாதை செலுத்துகிறீர்கள்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# *செய்தி:* **தீர்க்கதரிசியாகிய எலிசா,** அக்டோபர் 2, 1956, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

46. இப்பொழுது, கவனியுங்கள். அதன்பிறகு எலியா, இன்னுஞ் சரியாகச் சொன்னால், எலிசா, தான் திரும்பிச் சென்று, கலசத்திலிருந்த (cruse) கொஞ்சம் உப்பைக்கொண்டு, கசப்பான தண்ணீரை தித்திப்பாக ஆக்கினான். ஓ, அற்புதங்கள் அப்படியே எல்லாவிடங்களிலும் பறந்து கொண்டிருந்தன.

47. அதன்பிறகு அங்கே ஒரு... ஓ, அவனுக்கு ஒரு... இப்பொழுது ஞாபகம் கொள்ளுங்கள், அவனுக்கு கோபமும் கூட இருந்தது. அவனுக்கு வழுக்கைத்தலை இருந்த காரணத்தினால், சில பிள்ளைகள் அவனைப் பார்த்து கேலி செய்தார்கள். உடனே அவன் அந்தப் பிள்ளைகளைச் சபித்தான், அது அதிகமாக பிள்ளைகளின் நிமித்தமாக அல்ல; தேவனுக்கு மரியாதை செலுத்தும்படியாக, தங்களுடைய பிள்ளைகளை வளர்க்காமல் இருந்த அந்தப் பெற்றோர்களின் நிமித்தமாக அது அவ்வாறு நடந்தது. அதுதான் அதுவாக இருந்தது. அந்தப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இழந்தார்கள், ஏனென்றால் இரண்டு பெண்கரடிகள்

அந்தப் பிள்ளைகளில் நாற்பத்திரண்டு பேரைக் கொன்றுபோட்டது; நிச்சயமாக நூறு அல்லது அதற்கும் அதிகமான பிள்ளைகள் எலியாவுக்கும் பின்னால் ஓடி வந்திருப்பார்கள். அவன் சமாரியா வழியாகப் போய் கொண்டிருந்தான், அங்கே நீண்ட காலமாக வார்த்தையானது அவர்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டிருந்தது, மேலும் இந்தத் தீர்க்கதரிசி... ஆனால் அங்கே ஏதோவொன்றை நீங்கள் காண்கிறீர்களா? அது தேவனுடைய செய்தியாளனைப் பற்றிய ஜனங்களுடைய மனப்பான்மையாக இருக்கிறது.

48. இந்த உலகத்திலே எப்பொழுதாவது தேவனுடைய செய்தியாளன் மத சம்பந்தமான மனிதர்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது கிடையவே கிடையாது. அது எப்பொழுதாவது இருந்ததா என்று வார்த்தையில் எனக்குக் காட்டுங்கள் பார்க்கலாம். கிடையவே கிடையாது. பெயரளவிலான சபை, ஆதிகால துவக்கம் முதல் தொடங்கி, தேவனுடைய செய்தி ஒவ்வொரு முறையும் புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கிறது. இன்றும் அதற்கு எந்த குறைவான காரியத்தையும் அது செய்யும் என்று உங்களால் எதிர்பார்க்க முடியாது.

49. இயேசு வந்தபோது, அவர் புறக்கணிக்கப்பட்டார். அவர், "உங்களுடைய... எவன் ஒருவன், உங்களுடைய, அல்லது உங்கள் பிதாக்களில் எவன் தீர்க்கதரிசிகளை கல்லால் எறியாமல் இருந்தான்? எவன் தீர்க்கதரிசிகளைப் புறக்கணிக்காமல் இருந்தான்?" என்று கேட்டார்.

50. இப்பொழுது, இங்கே இந்தச் சிறு கதையைப் பாருங்கள். வரிகளுக்கு இடையே வாசியுங்கள் (எனக்கு அது பிடிக்கும், உங்களுக்கும் இல்லையா?), வரிகளுக்கு இடையில். ஏன், வெளியே போய்க் கொண்டிருந்த இந்தச் சிறு பிள்ளைகள், வழுக்கைத் தலையாக இருந்த இந்தப் பிரசங்கியாரைப் பார்த்து, கேலி செய்து கொண்டிருந்தன. **அவைகள் அவனைப் பார்த்து என்ன சொன்னார்கள் என்று பாருங்கள்: "வழுக்கைத் தலையா, எலியாவைப் போன்று நீ மேலே போகவில்லையா?" என்று அந்தப் பிள்ளைகள் கூறினர். எலியா மேலே போனான் என்று அவர்கள் நம்பவில்லை, அவர்கள் அதை சந்தேகித்தார்கள்.**

51. அவர்களுடைய ஆசாரியர்களும் அவர்களும் அவர்களிடம் கூறியிருந்தார்கள், அவர்கள் அநேகமாக, "ஓ, அவன் மேலே

போகவில்லை. அது கொஞ்சம் மதவெறித்தனம் தான். அவன் அபிஷேகம் பண்ணப்பட்ட அதே அபிஷேகத்தைக்கொண்டு இந்த ஆசாமி அபிஷேகம் பண்ணப்பட்டான் என்று எதிர்பார்ப்பதா. ஓ, அது முட்டாள்தனம். இவனையும் மேலே போகும்படி இவனிடம் சொல்லுங்கள்" என்று கூறியிருந்திருப்பார்கள்.

52. இதோ அந்தச் சிறு குழந்தைகள் போகிறார்கள். "பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை வளர்த்து ஆளாக்கு." பெற்றோர்கள் அதை விசுவாசியாத காரணத்தினால், இதோ அந்தப் பிள்ளைகள் போகின்றன.

53. **நீங்கள், நீங்களே கூட போகாமல் இருந்துவிட்டு, உங்களுடைய பிள்ளைகள் ஞாயிறு பள்ளிக்கு போக வேண்டுமென்றும், கர்த்தரைச் சேவிக்க வேண்டுமென்றும் உங்களால் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? நீங்கள் ஒன்றுமே இல்லாமல் இருக்கும்போது, உங்களுடைய பிள்ளைகள் ஏதோவொன்றாக இருக்கும்படி உங்களால் எப்படி எதிர்பார்க்க முடியும்?** அது சற்று மூர்க்கத்தனமாகவும் எந்த மரியாதையும் காண்பிக்காமல் இருப்பதாகவும் இருக்கிறது, ஆனால் நான் அதை அந்தவிதமாகக்

கூறும்படி கருதவில்லை; ஆனால் நான் அதைக் கூறும்படி, அவர் என்னைக் கொண்டிருந்தார், எனவே நான்... இது முன்கூட்டியே தியானிக்கப்பட்டதல்ல. சரி. ஆனால் அது... நீங்கள் ஒன்றுமில்லை என்று நான் கூறக்கருதவில்லை, ஆனால் நீங்கள் எந்த வேலையையும் செய்யாதிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும்போது, அதைத் தான் நான் சொல்லவருகிறேன். **நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக, அப்படிப்பட்ட ஒரு மாதிரியை வைத்திருக்கும்போது, அவர்கள் நீதிமான்களாக இருக்கும்படி உங்களால் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? உங்களால் எவ்வாறு அதைச் செய்ய முடியும்? அவர்களுக்கு இருக்கும் மிகச் சிறந்த மாதிரி நீங்கள்தான். அவர்கள்... அதைப் பார்க்கும்போது, அவர்கள் உங்களைத் தான் பார்க்கப் போகிறார்கள். வேறு யாரையும் அவர்கள் பார்க்க மாட்டார்கள், ஏனென்றால் உங்களுடைய சுபாவம் தான் அவர்களுக்குள் இருக்கிறது.**

54. சாத்தானைப் போன்று, மனிதர்களைக் குறித்து மிக அதிகமாக அவனுக்குத் தெரியும்.

அவன் தேவனிடம், யோபிடம் சொன்னான், அவன், “ஒரு மனிதன் தன்னுடைய தோலுக்காக என்னத்தைக் கொடுப்பான்?” என்று கூறினான். நிச்சயமாக. மனிதனுடைய சுபாவத்தைக் குறித்து அவன் ஏதோ அறிந்தவனாகத்தான் இருக்கிறான். அதை தாறுமாறாக்கி (தவறான வழியில் திருப்புவதற்கு) அவன் துணை செய்தான். அவனுக்குத் தெரியும்... அவன் அதில் ஒரு கையை வைத்திருந்தான். அதைக் குறித்து அதிகமாக அவனுக்குத் தெரியும்... எவ்வாறு என்று அவன் இன்னும் அறிந்திருக்கிறான். **ஜனங்களை விழப்பண்ண என்ன செய்ய வேண்டும் என்று அவனுக்குத் தெரியும். மனிதனுடைய சுபாவத்தை அவன் அறிந்திருக்கிறான்.**

55. உங்களை அதினிமித்தமாக விழும்படி செய்ய உங்களுக்கு முன்பாக எதைக் காண்பிக்க வேண்டுமென்று... அவனுக்குத் தெரியும். விஸ்கி மதுபானத்தின் மணத்தை எவ்வளவு நன்றாக வைக்க வேண்டுமென்றும், ஒரு சிகரெட்டை (புகைக்கும்படி) வைக்க, எவ்வளவு ஆசைகளைத் தூண்டி, அதை அடையும்படி, விடாது ஏங்க வைக்க வேண்டுமென்றும், வாலிப பையனோ சிறு பெண்ணோ, தங்கள் டீன்ஏஜ் வயதில், பீர் மதுபானத்தை குடிக்கும்படியாக, அவர்களை இங்கு

வெளியே ஒரு-ஒரு இடத்தில் எப்படி நன்றாக வைப்பது என்றும் அவனுக்குத் தெரியும். ஒரு சில வருடங்கள் கழித்து, (அவர்கள்) அந்தப் பழைய பைத்தியம் பிடித்த கண்களை உடைய அருவருக்கத்தக்க தோற்றமுள்ள விகாரமான கிழவிகளாக இருக்கும் அந்தப் படத்தை பார்க்கும்படி (வைக்க) அவன் முயற்சிக்கவே மாட்டான். அது சரியே.

56. முழுமையாக நிர்வாணமாக இருக்கும் ஒரு பெண்ணின் படத்தை வைப்பதில் அவன் சாகசம் செய்ய மாட்டான், ஆனால் அவளைக் கவர்ச்சியானவளாக ஆக்கும்படி எவ்வளவு துணிகளை அவளை விட்டு எடுத்துப்போட வேண்டுமென்று அவனுக்குத் தெரியும். நிச்சயமாக அது அவனுக்குத் தெரியும்.

57. **அவனுக்கு மனிதனுடைய சுபாவம் தெரியும். உங்களை அதற்குள்ளாக எவ்வாறு பிடிப்பது என்றும் கூட அவனுக்குத் தெரியும். அவன் இரவும் பகலும் விழித்திருந்து, கெர்ச்சிக்கிற சிங்கம்போல், எவனை விழுங்கலாமோ என்று சுற்றித்திரிகிறான். நிச்சயமாக, அவன் அவ்வாறு தான் இருக்கிறான். எனவே அதை எவ்வாறு**

**செய்வது என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது.**

58. ஆனால் தேவன் திரும்பிப் பார்த்தார், அவர் எலிசாவுக்குள் இருந்தார், அவன் (எலிசா) அந்தப் பிள்ளைகளை சபித்தான், உடனே காட்டிலிருந்து வெளியே ஓடிவந்த கரடிகளால், அவர்களில் 42 பிள்ளைகள் கொல்லப்பட்டார்கள், அந்தப் பிள்ளைகளில் 42 பேரை அவைகள் கொன்று போட்டன, ஏனென்றால் அவைகள் கீழ்ப்படியாதவைகளாக இருந்தன, **அந்தப் பிள்ளைகள் தவறான விதமான வீட்டில் வளர்க்கப்பட்டிருந்தன, தேவனுடைய தீர்க்கதரிசிக்கு மரியாதை செலுத்துவதற்குப் பதிலாக, தேவனுடைய தீர்க்கதரிசியை கேலி செய்யும்படி, அவைகளுக்கு தவறாகப் போதிக்கப்பட்டிருந்தது (கற்பிக்கப்பட்டிருந்தது).** நான் உங்களுக்குக் கூறுகிறேன், **நீங்கள் தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு மரியாதை செலுத்தும்போது, நீங்கள் தேவனுக்கே மரியாதை செலுத்துகிறீர்கள்.** நீங்கள் கிறிஸ்துவுக்கு மரியாதை செலுத்தும்போது, நீங்கள் தேவனுக்கே மரியாதை செலுத்துகிறீர்கள்.

59. இப்பொழுது, யார் தேவனுடைய பெரிய ஊழியக்காரர்? இங்கே பூமியின் மேலுள்ள ஏதோவொரு மனிதன் அல்ல. அது பரிசுத்த ஆவியானவரே. அவரைத் தான் நீங்கள் பரிகாசம் பண்ணுகிறீர்கள். அவரைப் பார்த்து தான் ஜனங்கள் நகைத்து, "இப்பொழுது, அந்த ஜனங்களைப் பாருங்கள். அவர்கள் வேடிக்கையாக நடந்துகொள்ளவில்லையா? அவர்கள் கொஞ்சம் பைத்தியமாகத்தான் இருக்கிறார்கள் என்று நம்புகிறேன்" என்று கூறுகிறார்கள். நீங்கள் அவ்வாறு செய்யும்போது, நீங்கள் தேவனைத்தான் பரிகாசம் பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். அது சரியே. அப்போது நீங்கள் மன்னிக்க முடியாத பாவத்தைச் செய்வீர்கள் (unpardonable sin); அது இம்மையிலும் அல்லது மறுமையிலும் ஒருபோதும் மன்னிக்கப்படவே மன்னிக்கப்படாது. அதற்கு விரோதமாக நீங்கள் ஒரு வார்த்தை பேசினாலும், அது ஒருக்காலும் மன்னிக்கப்படாது என்று இயேசு கூறியிருக்கிறார்.


★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதித் திருத்தம் செய்து வெளிவரும்.)*

★★★★★

















# நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக சரியான விதமான வீட்டை வைத்திருங்கள்



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

# *செய்தி:* தேவனால் அருளப்பட்ட பாதை, டிசம்பர் 1, 1953

12. மேலும் சிலசமயங்களில் அது ஓ, ஒருவிதத்தில் கடினமாக இருக்கிறது, ஆனால் அது உங்களுக்கு நன்மை செய்யும். ஆமாம். அது என்னை இரட்சித்தது, அது இப்பொழுது இந்த எல்லா 23 வருடங்களும் என்னை சந்தோஷமாக வைத்திருக்கிறது, நான் இயேசு கிறிஸ்துவுக்குள் மிகவும் சந்தோஷமாயிருந்து, சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணி வருகிறேன். மேலும் நான்... என்னுடைய ஜீவியத்தில் எனக்கு ஒரே ஒரு வருத்தம் தான் உள்ளது: அது என்னவென்றால், நான் ஒரு சின்னஞ்சிறிய குழந்தையாக இருந்த போதே, என்னுடைய பாவங்களை மன்னிக்கும் இயேசு கிறிஸ்துவை அறியாமல் போய் விட்டேனே என்பதுதான்.

13. பெற்றோர்களே, நான் இதை உங்களுக்குக் கூறுகிறேன், நான்... நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக சரியான விதமான வீட்டை வைத்திருங்கள். செய்ய வேண்டிய காரியம் அதுதான். ஏனென்றால், நான் வளர்ந்த போது, எனக்கு ஒரு கிறிஸ்தவ வீடு

இருந்திருக்குமென்றால், அநேகமாக நான் இன்றிரவு கர்த்தராகிய இயேசுவோடு கூட அதிக பக்கத்தில் இருந்து, இன்னும் அதிக ஜனங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பார்கள்; ஆனால் என்னுடைய ஜனங்களோ ஒரு பக்தியுள்ள குடும்பமாக இருக்கவில்லை. தேவனோ ஆச்சரியமான கிருபையினால் என்னை இரட்சித்தார். அப்போது, அது முதற்கொண்டு நான் அவர்களில் அநேகரை கர்த்தரிடம் வழிநடத்தியிருக்கிறேன். நான் எனது தாயாருக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன்; என்னுடைய தகப்பனார் தம்முடைய இருதயத்தை கிறிஸ்துவுக்குக் கொடுத்து, என்னுடைய கரங்களில் இருந்தவாறே மரித்துப் போனார். என்னுடைய தாத்தா, நான் அவருக்கு ஏறக்குறைய 90 வயதில் அந்த ஆற்றில் ஞானஸ்நானம் கொடுத்தேன்; என்னுடைய சகோதரர்கள் சிலருக்கும் மற்றவர்களுக்கும் நான் (ஞானஸ்நானம் கொடுத்தேன்). மேலும் எல்லாரும்... என்னுடைய சிறு... இங்கேயிருக்கும் என்னுடைய சிறிய மகன், அதன்பிறகு என்னுடைய சிறிய மகளுக்கு ஏழு வயதாக இருந்தது. என்னுடைய வேறொரு மகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க அவள் இன்னும் மிகவும் குழந்தையாக இருக்கிறாள்; அவளுக்கு இரண்டு வயது மட்டுமே ஆகிறது.

எனவே அவள் உயிர்வாழ்வாள் என்றால், ஏன், ஞானஸ்நானம் பண்ணப்பட அவளுக்குப் போதிய வயது ஆகும்போது, நான் அவளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பேன் என்று நம்புகிறேன். எனவே அவள் ஏற்கனவே கர்த்தரிடத்தில் ஒப்புவிக்கப்பட்டு விட்டாள், அல்லது நாங்கள் அதை "பிரதிஷ்டை செய்தல்" என்று அழைக்கிறோம். எனவே நாங்கள் அப்படியே அந்தக் குழந்தையை கர்த்தரிடம் பிரதிஷ்டை பண்ணி விட்டோம். எங்களால் கூடுமான வரையில் அவ்வளவு நெருக்கமாக வேதவாக்கியத்தைப் பின்பற்றவே முயற்சிக்கிறோம்.

14. கிறிஸ்துவோ, அல்லது வேதாகமத்தில் எந்த இடத்திலுமோ, அவர்கள் எப்பொழுதாவது குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்த இடத்தை நாம் ஒருபோதும் காண்பதில்லை. அவர்கள் வெறுமனே குழந்தைகளை கர்த்தரிடம் கொண்டு வந்தார்கள், நம்மால் கண்டுபிடிக்க முடிகிற ஒரே வேதவாக்கியம் அதுதான். அவர் தமது கரங்களில் அவர்களைத் தூக்கி அவர்களை ஆசீர்வதித்து, "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்" என்றார். நீங்களோ அவர்களை தெளித்து, அவர்களுக்கு

ஞானஸ்நானம் கொடுக்க விரும்புகிறீர்கள், அது சரி.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

★★★★★














# இயற்கைக்கு மேம்பட்டவைகள் 6

## சகோதரி. ஹாட்டி ரைட்டின் மகன்கள் இரட்சிக்கப்படுதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: நான் கேள்விப்பட்டேன் இப்பொழுதோ காண்கிறேன், நவம்பர் 27, 1965 மாலை, பத்தி எண் 151-165

இப்பொழுது ஜெபர்ஸன்வில்லில் கேட்டுக்கொண்டிருப்பது, ரைட் என்னும் பெயர் கொண்ட ஒரு குடும்பம். சகோ. உட்டும் நானும் அவர்களை காணச் சென்றிருந்தோம். அவர்கள் சபை இராப்போஜனத்துக்கு திராட்சைரசம் தயாரிப்பவர்கள். சிறிய ஈடித் அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் ஊனமுள்ள (crippled) ஒரு சிறுபெண், தன் வாழ்நாள் முழுவதும் வியாதியாயிருந்தாள், அவளைச் சுகப்படுத்த வேண்டுமென்று நாங்கள் எப்பொழுதுமே தேவனிடம் முறையிட்டதுண்டு. அவளுடைய சகோதரி ஒரு விதவை. அவளுடைய கணவர் கொல்லப்பட்டார். அவளுடைய பெயர் ஹாட்டி, மிகவும் தாழ்மையுள்ள ஸ்திரீ. நானும் சகோ. பாக்ஸூம் அவளுக்காக ஒரு முயலை வாங்க சென்றிருந்தபோது, அவர்கள் உணவு சமைத்து

நாங்கள் சாப்பிட வேண்டுமென்று கேட்டு கொண்டனர்.

நாங்கள் எல்லோரும் மேசையைச் சுற்றிலும் உட்கார்ந்து கொண்டு, சில நாட்களுக்கு முன்பு நடந்த இந்த சம்பவத்தைக் குறித்து பேசிக்கொண்டிருந்தோம். நான் மேசையினருகே உட்கார்ந்து இதைக் குறித்து பேசிக்கொண்டிருந்த போது, திடீரென்று நான், "என்ன நடந்திருக்க முடியும்? சகோ. ரைட், நீங்கள் வயோதிபர். உங்கள் வாழ்நாள் முழுவதும் நீங்கள் அணில் வேட்டையாடியிருக்கிறீர்கள். சகோ. ஷெல்பி, அணில் வேட்டையாடுவதில் நீர் நிபுணர். சகோ. உட், நீங்களும் அப்படித்தான். நானும் என் சிறுவயது முதற்கொண்டே அணில் வேட்டையாடி வந்திருக்கிறேன், நீங்கள் எப்பொழுதாவது அணில் காட்டத்திமரப் புதரிலும் வேலமரப் புதரிலும் கண்டதுண்டா?" என்று கேட்டேன்.

"இல்லை, ஐயா" என்றனர்.

நான், "அவை அங்கிருக்கவில்லை. எனக்குத் தெரிந்த ஒன்றே ஒன்று, அது அதே தேவன். ஆபிரகாமுக்கு ஆட்டுக்கடா தேவைப்பட்டபோது, அவர் யேகோவாயீரேவாக இருந்தார். அவர் தமக்கென்று ஒன்றை அளிக்க முடிந்தது. அதே காரியம் நிகழ்ந்தது என்று நான் விசுவாசிக்கிறேன்" என்றேன்.

அங்கு உட்கார்ந்து கொண்டிருந்த அந்தசிறு ஹாட்டி, "சகோ. பிரான்ஹாமே, அது உண்மையன்றி வேறொன்றுமில்லை" என்றாள்.

அவள் சரியானபடி கூறினாள். அவள் அதைக் கூறின போது, பரிசுத்த ஆவியானவர் அந்த வாய்க்காலுக்குள் மறுபடியும் வந்தார். அங்கிருந்த ஒவ்வொருவரும், அதை உணர்ந்தனர். நான் எழுந்து நின்று, "சகோதரி ஹாட்டி, **கர்த்தர் உரைக்கிறதாவது**, நீ அந்த சீரோபேனிக்கியா தேசத்து ஸ்திரீயைப் போல் சரியான வார்த்தையைக் கூறினாய். பரிசுத்த ஆவியானவர் என்னிடம் இப்பொழுது பேசி, உன் இருதயத்தின் வாஞ்சையை உனக்கு

அருளும்படி கூறுகிறார். நான் தேவனுடைய ஊழியக்காரனாயிருந்தால், அது நிறைவேறும். நான் தேவனுடைய ஊழியக்காரனாக இல்லாமற் போனால், நான் ஒரு பொய்காரன், அது நிறைவேறாது, நான் வஞ்சகன். இது தேவனுடைய ஆவியா இல்லையா என்று சோதித்துப் பார்'' என்றேன்.

அவள், ''சகோ, பிரான்ஹாம்'' என்றாள். (எல்லோரும் அழுதனர்). அவள், ''நான் என்ன கேட்பது?'' என்றாள்.

நான், ''ஊனமுள்ள உன் சகோதரி இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறாள்'' என்றேன்.

அவள் நன்கொடையாக அளித்த இருபது டாலர்களை அவளிடம் திருப்பிக் கொடுப்பதற்காக என் ஜேபியில் வைத்திருந்தேன். அந்த ஸ்திரீ அவளுடைய எளிய சிறுபண்ணையிலிருந்து ஆண்டொன்றுக்கு இருநூறு டாலர்கள் வருமானம் கூட பெறுவதில்லை. அவளுக்கு இரண்டு பையன்கள் இருந்தனர். அவர்கள் பள்ளிக்கூட நாட்களில், 'ரிக்கி'களாக இருந்து,

அவர்களுடைய தாயை துன்புறுத்தி வந்தனர் – பதினைந்து, பதினாறு வயதுடையவர்கள், அவர்கள் அங்கு நின்று கொண்டு நான் கூறுவதைக் கேட்டு கேலியாக சிரித்தனர்.

நான், "உனக்கு வயோதிப பெற்றோர் உள்ளனர். உன்னிடம் பணம் இல்லை. நீ பணத்தைக் கேட்டு, அது உன் மடியில் வருகிறதா என்று பார். உன் சகோதரியின் சுகத்தைக் கேள். அவள் எழுந்து நடக்கிறாளா இல்லையாவென்று பார்" என்றேன். ஆவியின் ஊக்கம் வரும்போது, அதை அறிந்து கொள்ள முடியுமென்று யோபைப் போல் நானும் அறிந்திருந்தேன். நான், "இதோ இங்கு பத்து பேர்களுக்கு முன்பாக நான் நின்று கொண்டிருக்கிறேன். இது நிறைவேறவில்லையென்றால், நான் ஒரு கள்ளத் தீர்க்கதரிசி" என்றேன்.

அவள், "நான் என்ன கேட்பது?" என்றாள்.

நான், “நீ செய்யப் போகும் தீர்மானம் உன்னைப் பொறுத்தது. உனக்காக நான் தீர்மானம் செய்ய முடியாது” என்றேன்.

அந்த ஸ்திரீ சுற்றுமுற்றும் பார்த்தாள். திடீரென்று அவள், “சகோ, பிரான்ஹாமே, என் இருதயத்திலுள்ள மிகப் பெரிய வாஞ்சை என் இரு பையன்களின் இரட்சிப்பே” என்றாள்.



“இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே, உன் பையன்களை உனக்குத் தருகிறேன்” என்றேன். அங்கு சிரித்து, கேலி செய்து கொண்டிருந்த அந்த பையன்கள், அவர்களுடைய தாயின்

மடியில் விழுந்து, தங்கள் வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணித்து, அந்த நேரத்திலேயே பரிசுத்த ஆவியினால் நிறைக்கப்பட்டனர். அந்த நேரத்திலேயே!

ஏன்? இது உண்மை. இது தவறாயிருக்குமானால் இந்த தேசத்திலுள்ள ஜனங்களுக்கு முன்பாக என்னைக்கொன்று போட தேவனுக்கு அதிகாரமுண்டு. இங்குள்ள உங்களில் அநேகரும், ஜெபர்ஸன்வில்லில் உள்ளவர்களும்; ஜெபர்ஸன்வில் கூடாரம் "ஆமென்" என்று இப்பொழுது ரீங்காரம் செய்வதை என்னால் கேட்முடிகிறது. ஏனெனில் அவர்கள் அங்கு உட்கார்ந்து கொண்டு இதைக்கேட்டுக் கொண்டிருக்கின்றனர். இது உண்மை! அது என்ன? தேவன் தமது இராஜாதிபத்திய கிருபையினால் அருளும் போது, அது நிறைவேறுகிறது. அதற்கு புறம்பே அது நிறைவேறுவதில்லை.

★★★★★



சகோதரி. ஹாட்டி ரைட்



சகோதரி. ஹாட்டி ரைட்டின் சகோதரி ஈடித்



சகோதரி.ஹாட்டி ரைட்டின் இரண்டு மகன்களும் ஞானஸ்நானம் பெறுதல்

# இயற்கைக்கு மேம்பட்டவைகள் 7

## மிக மோசமாக படுகாயமடைந்த ஒப்பசம் மிருகம் சுகமடைதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: பதினோராவது கட்டளை, பத்தி எண் 9-12



இயற்கையுடன் நான் அன்பைக் கொண்டு தொடர்புகொள்ள இன்னொரு முறை இவ்விதமாக நிகழ்ந்தது: கடந்த கோடைக் காலத்தில் நான் என் அருமை நண்பர்கள்

லீயோ மற்றும் ஜீனுடன் வீட்டிற்கு முன்புறத்தில் உட்கார்ந்து, தேவனுடைய வார்த்தையை அவர்களுக்கு போதித்துக்கொண்டிருந்தேன். ஒரு தாயின் அன்பு என்ற பொருளின் பேரில் ஒரு ஆழமான பாடத்தில் நாங்கள் இருந்தோம். அக்காலை செய்தித்தாளில் ஒரு அழகான இளம் கறுப்பினப் பெண் முறைத்தவறி கருவுற்றிருந்த ஒரு குழந்தையை பெற்றெடுத்து ஒரு போர்வையில் சுற்றி அதை ஒஹியோ நதியின் பாலத்திற்கு கொண்டு சென்று அதை தண்ணீரில் போட்டுவிட்ட சம்பவம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதை ஒரு டாக்சிகார் ஓட்டுனர் சட்ட ஒழுங்கு அதிகாரிகளிடம் தெரிவித்தார், அவர்கள் அதை விசாரித்து அது உண்மை என்பதை கண்டுபிடித்தனர். அந்த பெண்ணிற்கு நிச்சயமாக அன்பு என்பது இல்லை - அந்த குழந்தையை பெற்றெடுத்த ஒரு பெண்ணாக மட்டும் அவள் இருந்தாள், ஆனால் அவள் தாய் அல்ல என்று அந்த காரியத்தைக் குறித்து நாங்கள் கருத்து பரிமாறிக் கொண்டிருந்தோம்.

அப்பொழுது வண்டிப்பாதையில் ஒரு ஒப்பசம் (ஒரு சிறு அமெரிக்க மிருகம் - தமிழாக்கியோன்) என்னும் சிறு மிருகம் வந்து கொண்டிருந்ததை நாங்கள் நேரடியாகக் கண்டோம். அது வேலிகள் இல்லாத மற்ற வீட்டு முற்றங்களைக் கடந்து வேலியிடப்பட்டிருந்த என் வீட்டு முற்றத்திற்கு, அது தன்னுடைய வழியை அறிந்து வைத்துள்ளது போல, நேராக வந்தது. அது வேலியின் கீழாக தவழ்ந்து தாண்ட முயலவில்லை, அது நேராக வண்டிப் பாதையிலே வந்து திரும்பி, நேராக என் வீட்டு முன்புறத்துக்கு வந்தது. நான் பையன்களிடம், "அதற்கு ராபீஸ் நோய் அல்லது வேறெதோ ஒன்று இருக்க வேண்டும், ஏனெனில் ஒப்பசம்கள் இரவில் தான் நடமாடும் - அவைகளால் பகலில் சரியாக பார்க்க முடியாது" என்றேன்.

அதைப் பார்க்கும் படியாக நாங்கள் அந்த வண்டிப்பாதைக்கு அருகில் சென்றோம். முந்தைய நாளில் சகோதரன் பாங்க்ஸ் உட்

விட்டுவிட்டிருந்த அந்த தோட்டத்தை சமப்படுத்தும் கட்டையை நான் எடுத்து பாதுகாப்பிற்காக அதன் மேல் கவனமாக வைத்தேன். அந்த மிருகம் வழக்கமாக செய்கின்ற காரியமான, இறந்தது போல பாசாங்கு செய்யாமல், அது அந்த கட்டையை கடிக்க ஆரம்பித்தது.




இது என்னை வியப்புக்குள்ளாக்கினது, ஏனெனில் அந்த ஒப்பசம் மிருகங்கள் ஒரு சிறு அபாய அடையாளத்தைக் கண்ட உடனே இறந்துவிட்டது போலப் பாசாங்கு செய்து

படுத்துகிடக்கும் – அது அதின் மூல வழக்கமாகும்.

நான் அதன் முதுகுப் புறமாகத்திரும்பிப் பார்த்தேன், அது மிக மோசமாக படுகாயமடைந்திருந்தது – அதின் கால் ஒன்று உடைந்திருந்திருந்தது, அதின் தலையில் ஒரு பக்கம் நசுக்கப்பட்டு, நசுக்கப்பட்ட பகுதி உறைந்து போன ரத்தத்தால் நிறைந்திருந்தது. அந்த காயத்தில் ஈக்கள் அமர்ந்து அதைப் பெரிதாக்கி, அதில் புழுக்கள் உருவாக ஏதுவானது. அது மிக மோசமாக கிருமிகளால் நிறைந்ததால், அழுகின மாமிச நாற்றம் போல நாற்றமெடுத்தது. அது சில நிமிடங்கள் குப்புறப்படுத்திருக்கையில் அது சுமந்து வந்திருந்த சிறு குட்டிகள், அதினுடைய குட்டிகளை வைக்கும் மதலைப் பையிலிருந்து வெளியே வந்துவிட்டன. அந்த ஓப்பசம் மிக பெலவீனமாக இருந்ததால் அதினுடைய மதலைப்பையை (pouch) நீண்ட நேரம் மூடிக்கொண்டிருக்க முடியவில்லை. அங்கே

ஒன்பது சிறு குட்டிகள் இருந்தன. அது தன்னுடைய சிறு குட்டிகளுக்கு பாலூட்டி அவைகளைப் பாதுகாக்க முயற்சித்துக் கொண்டிருந்தது. ஓ, அதை நினைத்துப் பாருங்கள், சரியா! அது தன் மரித்துக் கொண்டிருக்கிற நிலையிலும் பலம் குறைகின்ற நிலையிலும் தன்னுடைய சிறு குட்டிகளுக்கு பாலூட்டி அவைகளைக் காப்பாற்ற முயற்சித்துக் கொண்டிந்தது. நான் லீயோ மற்றும் ஜீனிடம், "இங்கே பாருங்கள் இளைஞர்களே, இது தான் உண்மையான தாய். இது தன் குழந்தைகளை காப்பாற்ற தன்னுடைய கடைசி மூச்சு வரை பிரயாசப்படுகிறது, ஆனால் அந்த கறுப்பு இன பெண்ணோ தன்னுடைய குழந்தையை ஆற்றில் போட்டு விட்டாள். ஒரு தாய் தன் குழந்தைக்கு பாராட்டுகிற உண்மையான தூய்மையான அன்பு இங்குள்ளது" என்றேன்.

ஓ, என் இருதயம் மிகவுமாக தொடப்பட்டது! அது மறுபடியுமாக எழுந்து நிற்க முயற்சித்தது, நான் அதை விட்டு விட்டேன், அது எழுந்து என் வீட்டை

நோக்கியிருந்த பாதையில் செல்ல ஆரம்பித்த போது நாங்கள் அங்கு நின்று அதை கவனித்துக் கொண்டிருந்தோம். அந்த ஓப்பசம் மிருகம் நேராக என்னுடைய வீட்டு முன் படிக்கட்டுப் படிகளில் சென்று சரிந்து விழுந்தது, அடுத்த அடியை அது எடுத்து வைக்கவே இல்லை. நாங்கள் அதனிடம் நடந்து சென்றோம், அப்பொழுது சகோதரன் மற்றும் சகோதரி உட்ஸ் வந்தார்கள். சகோதரி உட்ஸ் ஒரு கால்நடை மருத்துவம் தெரிந்தவர்களானபடியால் அவர்கள் என்னிடம், “அது பிழைக்க முடியாத அளவிற்கு மிக மோசமாக படுகாயமடைந்திருக்கிறது. ஆகவே சகோதரன் பிரன்ஹாமே நீங்கள் அதை கொன்று போடத்தான் வேண்டும்” என்று கூறினார்கள். நானோ, “ஓ என்னால் முடியாது!” என்றேன். அதற்கு அவர்கள், “இது மரிக்கத்தான் போகின்றது, அதன் குட்டிகள் பட்டினியால் சாகப் போகிறது, ஆகவே அந்த குட்டிகளை எடுத்து அவைகளை சீக்கிரமாக கொன்று விடுங்கள்” என்றார்கள். அவைகள் வேதனைப்பட

விடுவதைப் பார்க்கிலும், அவைகளைக் கொன்று விடுவது நலம் என்று என்னிடம் அவர்கள் உறுதியுடன் கூறினார்கள். ஆனால் ஓ, அவ்விதமாக என்னால் செய்ய முடியாது. ஆகவே அவர்கள் “சகோதரன் பிரன்ஹாமே, நீர் சென்று துப்பாக்கியைக் கொண்டு வந்து அந்த பரிதாபமான மிருகத்தை சுட்டுக் கொன்று விடுங்கள்” என்று கூறினார்கள். “இல்லை, சகோதரி உட்ஸ், அவ்விதம் செய்ய வேண்டும் என்று நான் நம்பவில்லை. என்னால் அதைச் செய்ய முடியாது” என்றேன். அதற்கு அவர்கள், “நீங்கள் ஒரு வேட்டைக்காரர் தானே?” என்றார். அதற்கு நான், “ஆமாம், ஆனால் நான் கொலை செய்பவன் அல்ல” என்றேன். அதற்கு அவர்கள், “நல்லது, என் கணவர் அவ்விதம் செய்யும்படி கூறுங்கள்” என்றார்கள். அந்த ஏற்பாடும் எனக்கு சரியானதாக தென்படவில்லை. ஆகவே நான், “சரி, நாம் சற்று காத்திருப்போம்” என்றேன்.

நாளானது கடந்து கொண்டிருந்தது, அன்று மாலை நான் என் குடும்பத்துடன் வெளியே சென்றேன். நாங்கள் திரும்பி வந்த போது, ஓ, அந்த ஒப்பசம் இன்னுமாக இருக்கின்றதா என்று காண நான் சென்றேன். அது அங்கே இருந்தது, முன்பிருந்ததை விட மரணத்தை அது நெருங்கி இருந்தது. அதற்கு சிறிது பலம் இருந்திருக்குமானால் இருட்ட ஆரம்பித்த உடனே அது புறப்பட்டுச் சென்றிருக்கும். ஏனெனில் அவை இரவில் நடமாடும் விலங்குகளாகும் என்பது எனக்குத் தெரியும் - ஆனால் அது அங்கே இன்னுமாக இருந்தது, அதன் குட்டிகள் பால் குடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தன. ஓ, காயம்பட்டு மரித்துக் கொண்டு படுத்திருந்த அந்த பரிதாபமான விலங்கிற்காக நான் மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன்.


அடுத்த நாள் காலை என் மகள் ரெபெக்காள் என்னிடமாக வந்தாள். அப்பொழுது சுமார் காலை ஆறு மணி இருக்கும், நான் கர்த்தர் பேரில்

தியானிக்கத்தக்கதாக என்னுடைய அறைக்கு அப்பொழுது தான் சென்றிருந்தேன், அவள், “அப்பா, அந்த பாவமான தாய் ஓப்பசம் விலங்கை என் மனதிலிருந்து என்னால் எடுத்துப்போட முடியவில்லை” என்றாள். நான், “என்னாலும் அவ்விதமாகச் செய்யமுடியவில்லை பெக்கி” என்றேன். ஆகவே நாங்கள் அதைச் சென்று பார்க்க முடிவு செய்தோம், நாங்கள் அந்த அதிகாலை வேளையில் அங்கே நின்று அந்த மிருகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தோம், அதன் நிலைமை இன்னும் மோசமாகியிருந்தது – அதனுடைய சுவாசம் மிக குறைவாக இருந்ததால் அது சுவாசிக்கிறதா என்பதை கண்டுபிடிப்பதே அரிதாயிருந்தது. பெக்கி அழ ஆரம்பித்தாள். ஆகவே நாங்கள் உள்ளே சென்றோம். நான் அவளை திரும்பவுமாக படுக்கைக்கு அனுப்பினேன். நான் திரும்பி என் ஜெப அறைக்கு வந்து உட்கார்ந்து, “ஓ தேவனே, அந்த பரிதாபமான தாய் ஓப்பசம் எவ்வளவாக வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் – அது எப்படியாக தன் குழந்தைகளை நேசிக்கிறது.

அது கொல்லப்படுவதை நான் காணவேண்டிய அவசியம் இருக்காது என நான் நம்புகிறேன்'' என்று நான் நினைத்தேன். நான் அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கையில் ஏதோ ஒன்று என்னிடம், "நேற்று அந்த மிருகத்தைக் குறித்து பிரசங்கித்துக் கொண்டிருந்தாயே, நீ உன் பொருளுக்கு அதை உவமானமாகப் பயன்படுத்திக் கொண்டாயே'' என்று கூறினது. நான், "அது சரிதான்'' என்றேன். "அது தான் உண்மையான தாய் என்று நீ கூறினாயே'' நான் "அது சரி தான்'' என்றேன், "ஆனால் நான் அதை உன் கதவண்டை அனுப்பியிருக்கிறேன், அது உன் கதவண்டை ஒரு சீமாட்டியைப் போல இருபத்து நான்கு மணி நேரமாக தரித்திருந்து ஜெபிக்கப்படத்தக்கதாக தன்னுடைய தருணத்துக்காக காத்துக் கொண்டிருக்கிறதே, நீ இன்னும் ஒரு வார்த்தை கூட கூற வில்லையே.'' நான், "நல்லது, நான்.....'' என்றேன். நான் "யாரிடம் நான் பேசிக் கொண்டிருக்கிறேன்?'' எனக்கு நானே நான் பேசிக்கொண்டிருக்கிறேனா?'' என்று கூறினேன்.

நான் குதித்தெழுந்து, “ஓ, தேவனே, பேசுவது நீர் தானே?” என்றேன். நான் என் தலையைத் தாழ்த்தி “ஓ இரக்கமுள்ள தேவனே, அதை அறியாதிருக்கிற உம்முடைய தாழ்மையுள்ள ஊழியக்காரனை மன்னியும். அன்புள்ள தேவனே, நான் ஞானத்தில் குறைவுள்ளவனாகவும் புரிந்து கொள்வதில் மிகவும் மந்தமுள்ளவனாகவும் இருப்பதற்கு மிகவும் வருத்தப்படுகிறேன். அன்புள்ள தேவனே என்னை மன்னிக்க வேண்டுமென்று நான் ஜெபிக்கிறேன்” என்று அழுதேன். பிறகு நான் அந்த பரிதாபமான தாய் ஓப்பசத்திடம் ஓடி அந்த மிருகத்திற்கு அருகே முழங்காலிட்டு, அது திரும்பவும் குணமடைய, ஜெபிக்க, தேவனிடம் என் தலையை உயர்த்தினேன். ஏறக்குறைய ஜீவனே இல்லாத அந்த ஓப்பசத்தின் உடலின் மீது என் கையை வைத்து பயபக்தியுடன் ஜெபித்தேன். நான் மறுபடியாக காலூன்றி நிற்கையில் அதனுடைய சரீரத்தில் ஜீவன் புதிதாக வர ஆரம்பித்தது. அது குதித்தெழுந்து தன் குட்டிகளை ஒன்று சேர்த்து எடுத்துக்கொண்டு, “அன்புள்ள ஐயா,

உமக்கு நன்றி" என்று கூறப்போவது போல என்னை நோக்கிப் பார்த்துவிட்டு புல்வெளியைக் கடந்து வண்டிப் பாதையை அடைய புறப்பட்டது. அது வண்டிப் பாதைக்கு சென்று, பிறகு திரும்பி, அது வந்த விதமாகவே சாலைக்குச் சென்று காட்டுக்குள் சென்றது! நான் மிகவுமாக களிகூர்ந்தேன். ஓ, எப்படியாக நான் தேவனைத் துதித்தேன்!



அந்த பரிதாபத்திற்குரிய ஓப்பசம் மிருகத்தை ஜெபத்திற்காக அவர் என் கதவண்டை வழி நடத்தினார், அதை ஜீவனுக்கென்று எழுப்பினார். பரிசுத்த

ஆவியானவர் வாசம் பண்ணத்தக்கதாக ஆத்துமா என்பதே இல்லாதிருக்கிற ஒரு மிருகம் - ஆனாலும் தேவன் தம்முடைய பலத்த கரத்தினால் அதை வழி நடத்தினார். எனக்குத் தெரிந்த வரையில் அது இன்றைக்கும் ஜீவித்து தன்னுடைய சிறு குடும்பத்தை எழுப்பிக் கொண்டிருக்கிறது.

தேவன், தம்முடைய பரிசுத்த ஆவியினாலே ஒரு சாதாரண ஊமையான ஒப்பசம் மிருகத்தின் ஜீவனானது காக்கப்படத்தக்கதாக, ஜெபத்திற்கு என்னிடமாக வழி நடத்துகிறாரென்றால், ஒரு ஒப்பச மிருகத்தைக் காட்டிலும் நீங்கள் எவ்வளவாக மதிப்புடையவர்களாயிருப்பீர்கள்? என் அருமை சகோதரரே, நீங்களும் ஜெபத்திற்காக இன்றிரவு இங்கே வந்திருக்கிறீர்களா? ஒரு ஒப்பசம் மிருகத்தை தேவன் எழுப்புகிறாரென்றால், நிச்சயமாக உங்களையும் அவராலே எழுப்பமுடியும். ஓ, நாம் நம்முடைய முழு இருதயத்தோடும் அவரை நோக்கிப் பார்ப்போமாக! வியாதிப்பட்டு இங்கே

படுத்திருக்கிறவர்களே, இராஜாதி இராஜா உங்களை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா? கவலைப்படாதீர்கள், பயப்படாதீர்கள். "ஓ, நான் தேவனுக்கு முக்கியமில்லாதவன்" என்று நீங்கள் கூறலாம். ஆனால் நான் இதைக் கூறுகிறேன். நீங்கள் அவருடைய பிள்ளை, நீங்கள் தேவனுக்கு தேவையாயிருக்கிறீர்கள், அவர் உங்களை நேசிக்கிறார். அவர் இவ்வளவாக உங்களில் அன்பு கூர்ந்ததினால் தான் அவருடைய அன்பானது வெளிக்காண்பிக்கப்பட்டபோது, எல்லையற்ற ஒப்புயர்வற்ற கிருபையானது அதனுடைய இடத்தை எடுத்துக்கொண்டு, உங்களை தம்மிடமாக திரும்ப மீட்பதற்காக ஒரு இரட்சகரை அனுப்பியது; இந்த இரட்சகரில் அவர் நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டார். ஏனெனில் அவர் உங்களை நேசித்தார். தேவன் தம்முடைய மக்களின் உபத்திரவங்களை அவர் கண்டார். ஆகையால் அவருடைய தழும்புகளால் நீங்கள்

குணமாகிவிட்டீர்கள். தேவனுடைய கிருபையானது ஒரு வழியை உண்டாக்குகிறது. ஏனெனில் அவருடைய அன்பிற்கு அது தேவைப்படுகிறது. ஆகவே அவருடைய அன்பானது அவருடைய உணர்வுகளை வெளிக்காண்பித்தபோது கிறிஸ்து தம்முடைய இடத்தை எடுத்துக் கொள்ள புறப்பட்டு வந்தார். அந்த இடத்தை எடுத்துக்கொள்ள ஒரு காரியமானது தேவைப்பட்டது. அவருடைய அன்பானது உனக்காக தனியாக வந்தது, கிருபை உனக்காக ஒரு பலியை அளித்தது. இப்பொழுது நீங்கள் அதை விசுவாசிக்க மாத்திரமே கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள், "அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைவான்" நீங்கள் அந்த காட்சியை பிடித்துக் கொள்ளுகிறீர்கள் என்று நான் நம்புகிறேன்.

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

...அங்கே நாம் ஓர் இடத்தைப் பார்க்கிறோம். அங்கே தேவனுடைய குமாரன் அதிகமான நேரத்தை ஜெபத்திலேயே செலவழித்தார். அவருக்குள் இருந்த பரிசுத்தாவியோடு ஐக்கியம் கொள்வதற்கு, இயேசுவே அதிக நேரம் ஜெபிப்பதில் செலவழித்திருப்பாரென்றால், நீயும் நானும் எவ்வளவுக்கதிகமதிகமாய் ஜெபத்தில் தரித்திருக்க வேண்டும்?

யவீருவின் குமாரத்தி சுகமடைதல், 55-0227E, பத்தி எண் E-15

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

**உங்களுக்குத் தெரியுமா, நீங்கள் ஜெபிக்கும் போது, நீங்கள் ஜெபத்திற்குப் பதிலைப் பெறுகிறீர்கள், அப்போது உண்மையாகவே அதிக, அதிக விசுவாசத்தைப் பெறுகிறீர்கள்.**

மோசேயை குறித்த போதனை, 56-0513, பத்தி எண் 160

*Only believe,*
*Only believe*
*All things are possible,*
*Only believe.*


சகோ. பினேகாஸ்
போன்: 8838623242,
9551855108
Email: jebakumarsa@gmail.com
www.thefinish.in